# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2022.07.15 |


## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2022 யூன்

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 யூனில் குறைவடைந்தன**

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், மாதத்திற்கு மாதம் அடிப்படையில் 2022 யூனில் வீழ்ச்சியடைந்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் பின்னடைவினை எடுத்துக்காட்டின.** அதற்கமைய, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் முன்னைய மாதத்திலிருந்து 6.2 சுட்டெண் புள்ளிக்களைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 யூனில் 44.1 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது. வழங்குநர் விநியோக நேரம் தவிர அனைத்து துணைச் சுட்டெண்களிலும் ஏற்பட்ட குறைவினால் இது தூண்டப்பட்டிருந்தது.

உயர்வான பணவீக்க சூழலுக்கு மத்தியில் கொள்வனவு சக்தி சீர்குலைவின் பகுதியளவான காரணமாக புதிய கட்டளைகள் குறிப்பாக, உணவு மற்றும் குடிபானம் தயாரிப்புத் துறையில் வீழ்ச்சியடைந்தன. நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் மற்றும் கொள்வனவுக் கட்டளைகளை நிறைவுசெய்வதறகான சாத்தியமான இடையூறுகள் தொடர்பில் வெளிநாட்டுக் கொள்வனவாளர்கள் கவலையடைந்தமையினால் ஏற்றுமதியினை நோக்காகக் கொண்ட பல தயாரித்தல் நிறுவனங்களும் எதிர்பார்த்ததைவிட குறைவான கொள்வனவுக் கட்டளைகளையே பெற்றுக்கொண்டன. முன்னைய மாதத்தை விட 2022 யூனில் ஏற்பட்ட உற்பத்தி அளவுகளின் வீழ்ச்சிக்கு பொருட்கள் பற்றாக்குறை மற்றும் தொடர்கின்ற சக்தி பற்றாக்குறை என்பன பிரதான காரணமாக அமைந்தன. எரிபொருள் பற்றாக்குறையும் உற்பத்தியினை நேரடியாகப் பாதித்தது அதேபோன்று போக்குவரத்தில் ஏற்பட்ட இன்னல்களும் மறைமுகமாகப் பாதித்தன. மேலும், தொழில்நிலை துணைச் சுட்டெண் குறிப்பாக உணவு மற்றும் குடிபான தயாரிப்புத் துறையில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. உள்நாட்டுச் சந்தையில் தேவையானளவில் கிடைக்கப்பெறாமை அதேபோன்று பொருட்களை இறக்குமதி செய்வதற்காக நாணயக் கடிதங்களைத் திறப்பதில் இடர்பாடுகள் ஆகியவற்றினைப் பிரதான காரணமாகக் கொண்டு கொள்வனவுகளின் இருப்பு வீழ்ச்சியடைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்தலில் தாமதம், சீனாவில் கொவிட்-19 தொடர்புபட்ட முடக்கல்கள், கப்பற் தாமதங்கள் மற்றும் உள்நாட்டுப் போக்குவரத்தினைப் பாதித்த டீசல் பற்றாக்குறை என்பனவற்றைப் பிரதான காரணமாகக் கொண்டு வழங்குநர் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் உயர்வான வேகத்தில் நீட்சியடைந்தது.

| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **50.3** | **44.1** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 47.5 | 38.3 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 44.5 | 36.2 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.0 | 45.7 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 39.4 | 34.8 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 71.7 | 72.8 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

நாட்டில் நிலவுகின்ற நிச்சயமற்ற பொருளாதார சூழல், வழங்கல் பக்க தடைகள் அத்துடன் சாத்தியமாக வெளிநாட்டுக் கேள்வி பலவீனமடைதல் என்பன காரணமாக அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் சீர்குலைந்தன.

**தயாரிப்பு கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**44.1**

2022 மேயுடன் ஒப்பிடுகையில் 6.2 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் மேயிலிருந்து 0.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 யூனில் 52.2 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 யூனில் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை யூரோ வலயம், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் இச்சுட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2022 யூலை 14இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் யூரோ வலயம் உள்ளடங்கலாக முக்கிய பிராந்தியங்களுக்கும் கொ.மு.சுட்டெண்ணை தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2022 யூனில் 40.3 சுட்டெண் பெறுமதிக்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.** புதிய வியாபாரங்கள், தொழில்நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் துணைச் சுட்டெண்களில் வீழ்ச்சிகள் இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது.

புதிய வியாபாரங்கள் 2022 மேயுடன் ஒப்பிடுகையில் 2022 யூனில் குறிப்பாக, போக்குவரத்து, தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் மற்றும் கல்வி துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட குறைவடைதல்களுடன் மேலும் வீழ்ச்சியடைந்தன.

கடுமையான எரிபொருள் பற்றாக்குறை உள்ளடங்கலாக தொடர்ச்சியான வழங்கல் பக்கத் தடைகள், என்பன பணிகள் துறையில் தொழில்நடவடிக்கைகள் யூனில் மேலும் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. மேலும், உயர்வான பணவீக்க அழுத்தங்கள், அதிகரிக்கின்ற வட்டி வீதங்கள், போக்குவரத்துத் தொடர்புபட்ட பிரச்சனைகள் மற்றும் பொருளாதார எதிர்பார்க்கை பற்றிய எதிர்மறையான எண்ணப்பாங்கு என்பவற்றுக்கு மத்தியில் குறைவடைந்த நுகர்வோர் செலவிடுதலானது கேள்வியினை குறிப்பாக அத்தியாவசியமற்ற பொருட்கள் தொடர்புபட்டவற்றை மேலும் பலவீனமடையச் செய்தன என பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். இச்சூழ்நிலைகளுக்குக் கீழ், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், போக்குவரத்து, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், தங்குமிடம் மற்றும் குடிபானம், கல்வித் துணைத் துறைகள் மாதகாலப்பகுதியில் சடுதியான வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. அதேவேளை, பாதகமான பயண ஆலோசனை எச்சரிக்கைகளால் தூண்டப்பட்ட இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சியும் பல துணைத் துறைகளுடன் தொடர்புபட்ட தொழில் நடவடிக்கைகளை எதிர்மறையாகப் பாதித்தது.

புதிய ஆட்சேர்ப்புகளை நிறுத்துதல், ஒப்பந்தம் முடிவுறுதல்கள், ஓய்வுபெறுதல் மற்றும் பதவிவிலகுதல் காரணமாக தொழில்நிலை யூனில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. எரிபொருள் மற்றும் ஏனைய வழங்கல் பற்றாக்குறைகள், ஊழியர்கள் எதிர்கொண்ட போக்குவரத்து இன்னல்கள் மற்றும் மின்துண்டிப்புக்கள் என்பவற்றின் விளைவாக மாதகாலப்பகுதியில் நிலுவையிலுள்ள பணிகள் மேலும் அதிகரித்தன.

| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **42.4** | **40.3** | - | **வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 45.5 | 43.2 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 39.0 | 35.1 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 38.5 | 38.9 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 51.6 | 52.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 37.4 | 32.3 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

நாட்டில் தொடர்ச்சியான அத்துடன் தீவிரமடைந்த நிச்சயமின்மைகளுக்கு மத்தியில் விடாப்பிடியான சாதகமற்ற வழங்கல் மற்றும் கேள்வி நிலைமைகளின் காரணமாக அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் யூனில் மேலும் கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 40.3**

2022 மேயுடன் ஒப்பிடுகையில் 2.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2022 மேயில் 51.9 இலிருந்து 2022 யூனில் 53.9 இனைப் பதிவுசெய்து, உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் விரிவடைதலைக் காண்பிக்கின்றது.

சீனா, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 யூனில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல், 2022 யூலை 14இல் உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.